சைவ பரிபாலன சபை வெளியீடு:
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

## Hindu Organ

வெள்ளிக்கிழமை தோறும்
[வெளிவருவது

பிரதி விலை : சதம் 40

மாசில் வீணையும் மாலை மதியமும்' வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் - 92] யாழ்ப்பாணம்:- துர்மதி ஞு வைகாசி மீ 29-5-81, 5, 12-6-81 வெள்ளிக்கிழமை [இல 3

உ
கணபதி துணை

# குரு வாக்கியம்

(ஆசாரியர் சிஷ்யருக்கு சமயதீக்ஷை செய்தபோது
போதிக்கத்தக்கது

நல்லூர்,
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்
இயற்றியது
தாரண ஞு 1884 - 1885

அன்பர்களே!

ஆன்மாக்களுக்கு எந்தச் சரீரத்திலும் மனித சரீரங்கிடைப்பது மிக அரிது; மனித சரீரங் கிடைத்தாலும், சைவசமயம் வழங்குந் தேசத்திலே பிறக்கக் கிடைப்பது அதினும் மிக அரிது; சைவசமயம் வழங்குந் தேசத்திலே பிறக்க கிடைத்தாலும் சைவசமயத்திலே பிரவேசிக்கக் கிடைப்பது அதினும் மிக அரிது சைவசமயத்தை அனுட்டித்து முத்தியின்பம் பெறும் பொருட்டே மனிதசரீரங்கிடைத்தது.

2) சைவசமயம் என்பதற்கு பொருள் சிவபெருமானை வழிபடுமார்க்கம். சிவபெருமான் பிறப்பிறப்பின்றி என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், இயல்பாகவே எல்லாம் அறிபவர், எல்லாஞ் செய்யவல்லவர், தமது அனுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றையும் வேண்டாதவர், பிறர் வசத்தினராகாது தம் வசத்தினராவே உள்ளவர், பசுக்களாகிய உயிர்களிடத்துள்ள இரக்கமே திருமேனியாக உடையவர். இவ்விலக்கணங்களெல்லாம் உடையவர் சிவபெருமானேயன்றி வேறில்லை, ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுக்களுக்குப் பதி, சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டென்றுவது சிவபெருமானுக்குச் சமத்துவம் உண்டென்றுவது கொள்வது சிவ நிந்தை. இவ்வுண்மையெல்லாம் அறிந்து சிவபெருமான் ஒருவரையே வழிபடுஞ் சமயம் சைவசமயம்

3) பசுபதியாகிய சிவபெருமானை வழிபடுநெறியையும், சிவபெருமானுடைய ஏவல்வழி ஒழுகும் பசுக்களாகிய தேவர்களை வழிபடுநெறியையும் அறிவிக்கும் பொது நூல் வேதம். சிவபெருமானை வழிபடுநெறியையே விரித்து அறிவிக்குஞ் சிறப்பு நூல் சிவாகமம். சிவபெருமானை வழிபடுதற்கு யோக்கியதையைப் பிறப்பிப்பது சிவதீக்ஷை;

சிவபெருமானுடைய அடையாளங்கள் விபூதி, உருத்திராக்ஷம். சிவபெருமானுடைய மூல மந்திரம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். சிவபெருமானை மிக மகிழ்விக்குந் தோத்திரங்கள் தேவார திருவாசகம், சிவபெருமானை வழிபடும் இடங்கள் குருலிங்க சங்கமம், குரு என்றது தீக்ஷைசெய்யுங்குருவையும், சைவசமய நூலைப்படிப்பிக்கு குருவையும், சங்கமம் என்றது சிவதீக்ஷை பெற்றுவிபூதி உருத்திராக்ஷந் தரித்துச் சிவாலயத்தொண்டு, சிவபூசை சிவசாத்திரம் படித்தல் முதலியன செய்யும் சிவனடியார்களையுமாம்.

அன்பர்களே!

4) உங்களுக்கு மனிதசரீரங் கிடைத்தது. அம்மட்டோ சைவசமயம் வழங்குந் தேசத்திலே பிறக்கவுங் கிடைத்துள்ளது, சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகிக்கும் பொருட்டு இங்கே இந்தக் கும்பத்திலும் இந்த மண்டலத்திலும் இந்த அக்கினியிலும் நம்மாலே ஆவாகித்துப் பூசிக்கப்பட்டு உங்களுக்கு அண்ணியரானர், சிவபெருமான உங்களுக்குத தீக்ஷையாகிய அனுக்கிரகத்தைச் செய்யும் பொருட்டு இடம் கொண்டு

(வளர்ச்சி 3-ம் பக்கம்)

## காரைநகர் புளியங்குளம்
### ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார்
## மகா கும்பாபிஷேகம்

மேற்படி ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் சிறப்புற நிறைவேறியதையிட்டு கடந்த 5 - 6 - 81 வெள்ளிக்கிழமை மஇங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அருளானந்தப்பிள்ளையார் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இம்மகாகும்பாபிஷேக உபயகாரரான ஆலடி தன்னை அழுதுமுல்லை, கணேசன் ஸ்ரோஸ் உரிமையாளரும் காரைநகர், தங்கோடை வாசியுமான பிரபல வர்த்தகர் திரு. பொ. பரஞ்சோதி அவர்களினதும் சகோதரர்களினதும் விசேட ஏற்பாட்டின்படி கிரியாகால வேளைகள் தவிர்ந்த நேரங்களில் விசேடசமயச்சொற்பொழிவுகளும் இடம்பெற்றுள்ளன.

3-6-81 காலை 6 மணிக்கு விக்னேஸ்வர அனுக்ஞையுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகியது, பிரதிஷ்டா குருமார்களாக சிவஸ்ரீ சி, சுப்பிரமணிய சாஸ்திரிகள் சிவஸ்ரீ கா. சாம்பசிவக்குருக்கள் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் ஆகியோருட்பட எழுவர் கருமமாற்றினர்.

## சிவானந்த குருகுலச் சேவை

யாழ் "சிவானந்தகுருகுலம்" சமஸ்கிருதகலா சாலையில் ஸ்ரீ நடராசப் பெருமான் சந்நிதானத்திலே பிரதி சனி ஞாயிறு தினங்களிலும் வேதபாராயணமும் கிரமசாரிய பயிற்சி வகுப்புகள் ஆதியனவும் நிகழும்வேளையில் பிராமண போஜனத்தி குநிதி உதவிபுரிய ப்பல அன்பர்கள் முன் வந்துள்ளனர். சிவானந்த குருகுல பரிபாலனசபைத்தலைவர் நா. சோமாஸ்கந்தக் குருக்களிடம் ஜூன் மாத வகுப்புகளின் போது பிராமண போஜன உபயத்திற்காகப்பலர் தலா ரூபா நூறு வழங்கிஉள்ளார்கள் என்பதை அறிந்து சைவஉலகம் அவர்களைப் பாராட்டுகின்றது.

X X X

## சமய அறிவுக் களஞ்சியம்

சிவானந்த குருகுல பரிபாலனசபை, கோயில் விழாக்களில் நடாத்தும் சமய அறிவுப்போட்டியையும் அதற்கு மில்க்வைற் அதிபர் பரிசில்களை நல்கி உதவுவதையும் அனைவரும்பாராட்டாதிருக்க முடியாது. ஆலயங்களுக்கு வந்து வழிபாடுசெய்யும் பக்தர்களிற்பலருக்கு சமயஅறிவு மிகவும் குறைவாக இருப்பது நாமறிந்ததே. எனவே வினாத்தாள்களைப்பெற்ற பின்பு சிறுவர்களும் முதியோர்களுங்கூடத் தாங்கள் விடைஎழுதிப பரிசு பெறவேண்டுமென்ற ஆர்வத்துடன் கோயிலில் நிகழும் கிரியைகளின்

# வையகம் நினைவுகூரும் வைகாசி மூலம்

## வேதம் நான்கினும் மெய்பொருள் விளக்கிய மெய்யடியார்

### நாதன் நாமம் நமச்சிவாய நயம்பெறப் பாடிய நற்குரவர்

திருக்கேதீச்சரத் திருவார் பெருவிழாக்களும் ஐந்து பேரறிவும் சிந்தையேயாகத்தோன்றிய ஐந்து பேர் இரதங்களின் அளப்பருங் காட்சியும் கண்டுகளித்துப் பேரானந்தங்கொண்ட சைவசமயிகள் அடுத்தாற்போலத் திருக்கேதீச்சரப்பதிகம் பாடிய திருஞானசம்பந்தர் குருபூசையைநிகழ்த்துவது தெய்விகப் பேறே

மிகுசைவத்துறைவிளங்க மண்ணுலகின் மீதெழுந்த ஞானத்தின் திருவுருவை நினைக்கும்தோறும் நினைக்கும் தோறும் சைவநெறிவளம் பெருகும் என்பது அடியார்களின் அநுபவமாகும்.

குரவரின் குருபூசைத்திருநாளிலே சிந்திக்கவேண்டியவையாவை? அவற்றைச்சிந்திப்பதால் யாம் அடையக்கூடிய பயன் யாது? இவ்வாறு நோக்குதல் இவ்வேளையிற் பொருத்தமாகும்.

பார்மண் டலத்தினிற் பன்னிரு பேரொடு
மன்னிநின்ற
நீர் மண்டலப்படப் பைப்பிர மாபுரம்
நீறணிந்த
கார்மண் டலக்கண்டத் தெண்டந் தோளன்
கருணைபெற்ற
தார்மண் டலமணி சம்பந்தன் மேவிய
தண்பதியே

என்ற ஆளுடைய பிள்ளையார்திருவந்தாதியில் குறிப்பிடப்படுஞ் சீகாழிப்பதியை எங்கள் சிந்தனைக்கெடுப்பதெனின் சீகாழிப்பதிகம் ஒன்றினை உற்றுநோக்குதல் இன்றியமையாததாகும்.

இன்பம் வேண்டும் மாந்தர்காள், இவ்வாறு வேண்டிரேல் எங்கள் தமிழ்முதல்வர் சம்பந்தர் திருவாய்மலர்ந்தருளிய திருக்கடைக்காப்பிலே சீகாழிப்பதிகத்தைச் சிந்தனைசெய்வீர்.

திருச்சிற்றம்பலம்

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பான்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள இன்பமே,

நம்மான மாற்றி நமக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுட னாடல்பு ரிந்தானை
அம்மானை அந்தணர் சேரு மணிகாழி
எம்மானை யேத்தவல் லார்க்கிட ரில்லையே
திருச்சிற்றம்பலம்.

நாநயக்கப்பாடும் நாயனர் நமச்சிவாயனை 'நல்லான் என்று நனிசுவை தரும் கனிவுடைய சொல்லால் நமக்கு விளக்குகின்ற அணிதான் என்னே;

நல்லவன் நடராசன்; மங்கள வடிவினன் அவன் சிவன் எனும் சீர்ப்பொலி நாமம் சிறப்பாக நின்றேன்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ற முதுமொழியுண்டு. யார் நல்லவர்கள்! மங்களவண்ணர்களே மாநதர்க்குள் நல்லவர்கள், மங்களவண்ணம் யாது: மண்ணுலகத்தோர் சிந்தை, சொல், செயல், செம்மையுடையவராயின் மங்களமானவர்களாவர். அவர்கள் புனிதத்தின் சின்னமாம் வெண்பொடி நீறணிந்திருப்

(வளர்ச்சி 2ம் பக்கம்)

தன்மைகளையும் அடியார்கள் கடைப்பிடிக்கும் வழக்கங்களிற் காணப்படும் குறைபாடுகளையும் உன்னிப்பாக அவதானிப்பதை உணரும்போது சைவசமய வளர்ச்சிக்கு அதுபெரும் தூண்டுகோலாக அமைவதைக் காணலாம், அண்மையில் டெ சபையினர் கன்னாகம் சுதிரைமலைச்சிவன் தேவஸ்தானப்பெருவிழாவில்நடாத்தியபோட்டியில் ஏராளமான சைவமக்கள் பங்குபற்றிச் சைவசமய அறிவைப்பெருக்கிக்கொள்ள எத்தனித்துள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது தோன்றும்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


இந்துசாதனம்

துர்மதி ஞூ வைகாசி மீ
29-5, 6, 12-6-81 வெள்ளி


## உய்யுநெறி ஒன்று உளதாமோ? - உளது உணர்வோமாயின்

மாணிக்கவாசகசுவாமிகளின் மணிவார்த்தைகள் எமக்கு வாழ்வளிக்கும் வழிவகைகளை நன்குவகுத்துக் காட்டுவன; அவ்வாறே முதல் ஏழு திருமுறைகளையும் உதவிய குரவர்களின் பொன்மொழிகளும் இவையெல்லாம் உளவாக ஏனோநாம் இன்னற்படுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்
குமரன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே.
திருச்சிற்றம்பலம்

வாணாளை வீணாக்கப்பழகினேமேயன்றி ஆக்கவழி அறிந்தோமில்லையே.

வானவர்கள் தாம் வாழ்வான் வாழ்த்துகின்றார் எனமணிவாசகம் கூறுகின்றது. மேனிலையிலிருக்கும் வானவர்கள் தாங்கள் நன்னிலையில் வாழவேண்டி மாதேவனைவாழ்த்துகின்றார்கள். ஆனால்மானிடர்களோ யாரை வாழ்த்துகின்றார்கள்? பொய்மையாளரைப் பாடுகின்றார் போலிப்பொருளைப் போற்றுகின்றார் புன் செயலைப் புரிகின்றார். எங்ஙன் இவர்கள் வாழமுடியும்!

மழை வளம் விளையுமா? பருவமழை பெருகும் இலங்கையிலே தென்மேற்குச்சோளகம் திசைதிருமபி விட்டதாம் என்றால் மனிதப்பண்பை மறந்து மறத்தொழில் புரிகின்றான் மனிதன் என்பதே

மின்ஆற்றல் பெறமுடியாதவகையிலே பருவமழை பெய்யா தொழியவே இப்பொழுது வழிபாடு செய்யுங்கள் என்று அரசாங்கம் அபயக்குரல் எழுப்புகின்றது.

செல்வம்வந்துற்றகாலைத் தெய்வமும் சிறிது பேணார் செய்வன அறிந்து செய்யார் என்றவாறு மானிடர்கள் மாயாவாழ்க்கை வளத்தில்மயங்கி ஈசன்பால் அகங்குழையாது, அன்புருகாது,

## கூட்டுப் பிரயாணம்

உடுப்பிட்டி அருளம்பல முதலியார் 1800ம் ஆண்டிற்கு முன்னும், பின்னும் வாழ்ந்தவரென முன்னர் கூறினேம். (வல்லிபட்டி குமாரசுவாமி முதலியார் இயற்றிய அருளம்பலக் கோவையின் பாட்டுடைத் தலைவன் அவரே போலும் ஈழகேசரி 14. 8 1936 அந் நூலினை நான் பார்த்த தில்லை.)

நாவலர் காலத்திற்குச் சிறிது முன்னர் அருளம்பல முதலியார் உடுப்பிட்டியில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடாத்தி வந்தார். தமிழ், ஆங்கிலம், மருத்துவம், சோதிடம், சங்கீதம் யாவும் இலவசமாகக் கற்பிக்கப்பட்டன அருளம்பல முதலியார் இறந்த பின்பு அவர் குமாரர் அம்பலவாண முதலியார் அப்பள்ளிக்கூடத்தைப் பரிபாலித்து வந்தார்

1.845ம் ஆண்டு பேர்சிவல்—நாவலர் உறவு மெலிவுற்றதெனப் பாவலர் சரித்திரதீபகமும் (பக். 32 உதயதாரகையும் கூறுகின்றன. 1846ம் ஆண்டு தை மாதம் முதலாக நாவலர் பிள்ளைகளைச் சேர்த்துக் கற்பிக்கத் தொடங்கினார். யாழ்ப்பாணத்திற் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டு உழைத்த அம்பலவாண முதலியாரும், ஆறுமுக நாவலரும் தாய் நாட்டிலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும் வித்துவான்களைக் காணவும், அவ்வாண்டு ஆனி மாதத்தில் மேற்கூறிய இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டனர் போலும்.

1847ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் நகதி வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் நாவலர் நிகழ்த்திய கன்னிப்பிரசங்க வைபவத்திற்கு இந்த அம்பலவாண முதலியார் அவர்களே தலைமை தாங்கினர் எனவும் கூறப்படுகின்றது.

---

பூமாலை புனைந்தேத்தாது புகழ்ந்துரையாது திருக்கோயில் போகாது, மெழுகாது நிற்கின்றனர்.

இன்னல் வந்துவிட்டதே இனியேனும் நன்னெறியிற் செல்ல மனம் உன்னப்படாதா!

உய்யுநெறியொன்று உளதா என்று கலங்கேல்; உண்டு வழி என்று நினைவீர்.

கொலையும் களவும் புலையும் தவிருங்கள், மதுவும் மாமிசமும் அருந்தாதிருங்கள் உய்யும்வழி தோன்றும் உடன் வான் நின்று வளமாம் மழை பொழியும் வாழ்வுமலரும்.

## சபைக்கும் சமயத்துக்கும் பணி புரிந்த பழங்குடிவழிவந்த பண்பாளன்

### வித்தியாதிபதியாக முன் விளங்கிய கல்வி மேதை சிவ உ. சோமசேகரம் அவர்கள்

யாழ்ப்பாண நாட்டின் சமய சமூக மொழி முதலியவற்றின் எழுச்சிக்காக உழைத்த பழங்குடி மரபினர் வண்ணார்பண்ணையில் வாழ்ந்து வந்தனர்.

நாடு மறவா நாவலரின் பின் சைவசமய பரிபாலனத்துக்காகவும் சைவ மாணாக்கர்களின் உரிய கல்விக்காகவும் பாடுபட்டுவந்த பெரியார்கள் பலரில் ஒருவர் சட்டத்தரணி இ. சிவகுருநாதர். அவர்களைத் தாய்மாமனாகக் கொண்டவர் சிவ. உ, சோமசேகரம் அவர்கள்,

இந்துக்கல்லூரியிலும் கொழும்பு ஆநந்தக் கல்லூரியிலும் கல்விகற்றுக் கலைமாணியாகி, முதுமாணியாகி வித்தியாதரிசியாகி வித்தியாதிபதியாகிப் படிப்படியாகக் கல்வித்திணைக்களத்தில் செல்வாக்குற்ற திரு. சோமசேகரம் ஒரு பரந்த அறிஞன். அறவுப்போக்கில் மனங்கொண்டவர்.

அவர்களின் தந்தையார் ஆங்கில இந்துசாதன உபபத்திரிகாசிரியராகவும் பத்திரிகாசிரியராகவும் கடமை ஆற்றியவர். இந்துக்கல்லூரியை நடத்திய சபையில் முக்கியஸ்தர்.

சைவபரிபாலனசபையின் நிருவாகசபையின் அங்கத்தவராக இறுதிவரை நற்பணி புரிந்தவர், பலஆண்டுகள் உப தலைவராக உழைத்த பெரியார் சிவ உ. சோமசேகரம் அவர்கள். இறைவனடியில் (8-6-81) நிறைவெய்தினர். ஆன்மா சாந்தி அடைய அரனை வேண்டுவோம்.

---

## வையகம் நினைவுகூரும்

(1ம் பக்கத்து வளர்ச்சி)

பார். நாதன் நாமம் நமச்சிவாய என்று நவின்றவரும் சொன்மங்களம் துலங்குபவர் ஆவர்.

மங்களவடிவினனும் சிவனை மேலும் சுட்டிக்காட்டுகின்றார் "தோடுடையசெவி" கண்ட தூயோன்.

மறையோடு இயல் ஆறங்கம் வல்லான். மறை தந்த வல்லான்; மறைதரும் வல்லமை பிறருக்கில்லை யென்பது பெற்றும். சைவமறைதந்த சிவன், அங்கங்கள் ஆறுந்தந்த வல்லான். ஆற்றல் உடையவன் வல்லாளன் என்றால் வன்மையுடையவன் என்பது பொருள். இந்த வன்மை எவருக்குமிலா ஆற்றலையே குறிக்கும். வன்செயல் என்ற சொற்றொடரில் வரும் வன்மை உலகியலில் அழுத்தலாற்றலைக் குறிக்கும் அபாயச் சொல்.

"நான்மறையோடாறங்க மாயினான்காண்," அவ்வளவோடமையவில்லை அடியார் கவுணியனாரின் அணியுரை. வல்லவர்பால் மலிந்தோங்கிய சொல்லானை என்று மேலும் அணிசெய்தார். யார் இந்த வல்லவர்? வல்லானை வாழ்த்தும் மறையவராகவே இருத்தல் வேண்டும் இவர்கள். அந்தணர்க்கு வன்மை உண்டென்றால் அதுசெந்தண்மை என்னும் வன்மை மறைதந்தவனை மறவாது மறையோதும் வன்மையாம் ஆற்றல்படைத்தவர் அந்தணர்கள்.

வேதந்தந்தவனின் போதம் மறவாது வேதியரைச் சுட்டிக்காட்டிச்சிவனை இவன்என்று தெளிவுபடுத்துகின்றார் சீர்காழிச்செம்மல்.

வேதம் ஓதும் வேதியர்க்கோர் மழை என்று நிலவளநீர்மையை எடுத்துச் சொன்ன புலவரின் சிந்தையில் எழுந்த நுண்மையையும் நோக்குவோமாக.

இந்த வேதம் வல்லவரிடத்தில் ஓங்கும் சொல்லானாய் ஈசன் நிற்பதை, ஞானக் குழந்தை கண்டு அதை ஈண்டு தந்தது என்க.

திருமேனி தீண்டுவார் ஒருந்துதிக்குடையவன் சிவன் என்ற பொருள்வளத்தின் பொருத்தம்தான் என்னே. சிவனெனும் பெருமகன் எவ்வாறு கருணைபுரிகின்றான் என்றால் எங்களைப் பீடித்திருக்கும் பெருங்குற்றங் கொணருந்தன்மைகளைத் தீர்த்தே ஆட்கொள்கின்றான் மும்மலங்களாம் ஆணவம் கன்மம் மாயை மூப்பெருங் குற்றங்களாம்; மானம், தனது குற்றத்தை தடுத்தது மானம் ஒன்றே என்றுவரும், சூரன்வாய்க் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் எழுந்ததாகக் கச்சியப்ப சிவாசாரியார் வகுத்த கருத்தினை ஈண்டு நோக்குதல் ஏற்புடைத்தாகும். இக்குற்றங்கள் நீங்கின் சிவஞானம் இயையும் என்று எடுத்தாண்டார் இன்னிசையாற்றமிழ் பாடிய சீகாழிவேந்தல்.

(வளர்ச்சி 8ம் பக்கம்)

## பவள விழா நிகழ்ச்சித் தொகுப்பு

மங்கலவாத்திய இசையும் திருமுறை ஓதும் இசையும் ஒருங்கிணைந்து சித்திரைத் தென்றலின் இனிமைத் தன்மையை மேலும் இங்கிதஞ் செய்ய சிவநெறிக் கோலத்துடன் மாவை ஆதீனத்திலிருந்து தொடங்கிய திருமுறை ஊர்வலம் துர்க்காதேவி ஆலயத்தை அடைந்ததும் சைவ சித்தாந்தக் கொடியை துர்க்கா தேவி ஆலய அறங்காவற்குழுத்தலைவர் ஏற்றிவைத்தனர்.

ஆசியுரைகள் நல்லைத் திருஞானசம்பந்தராதீன சுவாமிகளாலும் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களாலும் (இது ஆசிரியர் ஆ. பஞ்சாட்சரம் அவர்களாலே வாசிக்கப்பெற்றது) நிகழ்த்தப்பெற்றபின் வரவேற்புக்குழுத்தலைவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் சமாசத்தலைவர் திரு. தி. கி, நாராயணசாமி அவர்களும வரவேற்புரைகள் ஆற்றினர்.

ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினர் (இந்துசாதனத்தில் ஒருபகுதி வெளிவந்தது)

நூல்கள் வெளியீடு கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது சைவசித்தாந்த நூல்கள் அனைத்துலக மொழி ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவும் தகையினவாய அரும் பொக்கிஷங்கள் என்றனர் பேராசிரியர்

சமாசச் செயலாளர் திரு இரா. சங்கரன் அவர்கள்
வளர்ச்சி 4ஆம் பக்கம்

---

## வலந்தலை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயம்

மேற்படி ஆலய விசேட பொதுக் கூட்டம் ஆலய மண்டபத்தில் 17.5,81 ஞாயிறு பி.ப 5 மணியளவில் சபைத்தலைவர் திரு சி சேனாதிராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஆலயத் திருப்பணிவேலைகள் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டு உடனடியாகத் திருப்பணியை ஆரம்பிக்கத் துரித நடவடிக்கை எடுக்குமாறும் மலாயா சிங்கப்பூர், இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள அன்பர்களிடமிருந்து நிதிதிரட்ட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தபடியாக மேற்படி ஆலயப் பொறுப் புரிமைச் சபையின் அமைப்புவிதிகள் வாசிக்கப்பட்டுப் பொதுச்சபையின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டது.

இறுதியில் அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்கள் "சிலம்புத் தெய்வம்" எனும் பொருள் பற்றி அருளுரை நிகழ்த்தினர். எழுவரைக் கொண்ட ஆலயப் பொறுப்புரிமைச் சபையும் கலைகலாசார ஆலோசகர் குழுவும் தெரிவாகின,

## இணுவை முருகன் மஹோற்ஸவம்

அருட்கீர்த்தி மிக்க ஈழத்துமுருகன் கோயில்களில் ஒன்றான இணுவில் கந்தசுவாமி கோவிலின் மஹோற்ஸவம் கடந்த 7.6.81 ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்தோடு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 25 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும் சில முருகன் கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

# அப்பர் அருளுரை

[ சைவ பரிபாலன சபையாரால் கைதடி அனாதர் இல்லத்தில் நிகழ்த்தப்படும் சமயச் சொற்பொழிவுத் தொடரிலே 'பிரசங்கமணி' பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்கள் ஆற்றிய உரை

[ முன் வளர்ச்சி — 8 ]

"காண்பவன் சிவனேயாதல் அவனடிக்கன்பு செய்கை மாண்பறும் அவன்தன்பாகம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண்செயல்" என்பது சித்தியார் கருத்து:

இச்சம்பவத்தை அப்பர் அருள்வாக்கில் அவதானியுங்கள்"

கடுகிய தேர்செல்லாது கைலாயம் மீது
கருதோல், உன்வீரம் ஒழிநீ
முடுகுவதன்று தன்மம் எனநின்று பாகன்
மொழிவானை நன்று முனியா
விடுவிடு என்று சென்று விரைவுற்றரக்கன்
வரையுற்றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்று வீழவிரலுற்ற பாதம்
நினைவுற்றது என்றன்மனமே.

அப்பர், விரலுற்றபாதத்தை மறவாது நினைவுற்றதலே தான் அரனைக்கண்டார்.

காலுந்தலையும் அறியார்கலதிகள்
காலந்தசத்தி அருள்என்பர் காரணம்.

என்கின்றது திருமந்திரம் எனவே கால்— திருவருட்சத்தி தலை—சிவம் திருவருட்சக்திக்கூடாகச் சிவத்தைக் காணவேண்டுமென்பது. இதனால் அப்பர் பெருமான் திருவடியை இடையறாது தியானத்தால், தேடிக்கண்டேன் தேடித்தேடொணாததேவனை என்னுள்ளே தேடிக்கண்டுகொண்டேனென்று கூறியருளினர்

எங்கே கண்டாரெனில் உடம்பாகிய கோயிலினுள்ளே கண்டார் எனப்பல திருவருட்பாக்கள் மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றார், ஒன்றைப்பார்ப்போம.

உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகழியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனுந்திரி மயக்கி
இடம்பட ஞானத்தீயால்
எரிகொள இருந்து நோக்கில
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே,

இதன்பொருள் காரிட்ட ஆணவக் கரு வறையிற் கிடக்கின்ற நாம் மெய்ஞ்ஞான விளக்கை ஏற்றி அப் பேரொளிக்கண் அகக்கண்கொண்டு காண் போமாயின் இறைவன்கழலடி காணலாமென்பதாம்.

விளக்கிடுதற்கு முதல்வீடும் பின் அகலும் நெய்யும் திரியும் நெருப்பும் வேண்டும்.

வீடு—உடம்பு அகல்=உள்ளம் நெய்=உணர்வு திரி=உயிர் நெருப்பு=ஞானம் என்க. மேலும் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்,

என்னும் அருளுரை பயன் கருதியே எழுந்ததாகும். இவ்வுருவகங்கள் மன்றத்தை மிகமிக இன்புறுத்தலோடு மெய்யனுபவத்தையும் வெளிப்படுத்துகின்றன.

மடம்படும் உணர்நெய்எனவும் ஞானத்தீஎனவும் இரண்டிடத்தும் உணர்வுஞானம் என ஒரு பொருளைத்தரும் சொற்களே உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்குப் பொருள் வேற்றுமை வேண்டும். இன்றேல் உருவக இலக்கணம் பிழைபடும். "மடம்படும் உணர்வு" என்பது அறியாமை கெடுத்தற்கேதுவான நூலறிவென்பது" இடம்படு ஞானம்' என்பது மூலஇருளின் வல்மை கெட எங்கும் பரந்தெழுகின்ற அனுபவஞானம் என்பதும் தெளிவுபடும். அதாவது நூலறிவு அபரஞான மெனவும அனுபவஞானம் பரஞானம் எனவும் அறிக. கற்றுண்டு இனிக்குமென அறிதல் அபரஞானம். வாயிலிட்டு நுகர்ந்தனுபவித்தல் பரஞானமெனவும் விளங்கலாம்.

இஞ்ஞான விளக்கொளியிற் காண்பது ஆன்மாவாகவும் உயிரெனுந்திரியெனக் கூறுவது எப்படிபொருந்துமெனில், நிலம்நீர் நெருப்புயிர் என்றஇடத்து உயிர்காற்றென்று பொருள் பட்டாற்போல இவ்விடத்துப் பிராணவாயுவெனப் பொருள் கொள்ள வேண்டும்.

அப்பர் வாக்குஅருள்வாக்கு இந்தச்சரீரம் நமக்குக்கிடைத்தது நாம்கடவுளை அறிந்து முத்திஇன்பம் பெறும்பொருட்டே என்பது நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மந்திரம்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

## பட்ட மளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சின்னச் லேனில் எழுந்தருளியிருக்கும் மகாமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவ காலங்களில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளது பிரதமசீடன் தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன் அவர்களாற் சம்பராவணை விர்வுரை பக்கவாத்தியசகிதம் 12 தினங்கள் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்மணி S. கணேசசுந்தரன் அவர் களைப்பாராட்டு முகமாக டிடி. ஆலயசார்பில் சோ.சிவரத்தினம் (யா.மா.ந.சபை உறுப்பினர்) அவர்களால் "முத்தமிழ்க்கலாரத்தினம்" என்ற பட்டம் வழங்கி அவர்பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

## பழைய நிகழ்ச்சிகள் புதிய பார்வையில்

இரு தமிழ்ப் பெரியார் சென்னைக் (Madras) கூட்டுப் பிரயாணம் 1846 ஸ்ரீலஸ்ரீ கந்தப்பிள்ளை குமாரர் ஆறுமுகநாவலர் அவர்களும். ஸ்ரீலஸ்ரீ அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாண முதலியார் அவர்களும் சிவபதமடைந்த நாட்டார் பாடல் ஆராய்ச்சியாளர் வட்டுக்கோட்டை, மக்கள் கவிமணி, மு. இராமலிங்கம் அவர்கள் 1971ம் ஆண்டு இரண்டாம் மாதம் 24ம் திகதி புதன் கிழமை வெளியான "ஈழநாடு" பத்திரிகையிற் பின்வருமாறு எழுதுகின்றார்.

"இலக்கண இலக்கியங்களில் மகாநிபுணர்களாகிய கனம் பொருந்திய மகாஸ்ரீ அருளம்பலமுதலியார் குமாரர் அம்பலவாண முதலியாரும் மகாஸ்ரீ க. ஆறுமுகப்பிள்ளை அவர்களுஞ் சென்னை மாநகரத்திலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும், வித்துவான்களைக் காணவும், இந்த மாதம் 8ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணப்பட்டார்கள்.

பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றத்தோடு சம்பந்தப்பட்ட பிரயாணமோ இது, அல்லது நாவலர் சரித்திரத்தில் இதுவரை வெளிவராத ஓர் இந்தியப் பிரயாணமோ இது என்பதே என் வியப்பிற்குக் காரணம்".

பைபிள் மொழிபெயர்க்க ஆரம்பிப்பதற்கு (ஆடி 1846) ஒரு மாதத்திற்கு முன் (ஆனி 1846) இப்பிரயாணம் நிகழ்ந்திருப்பதால், நாவலர் சரித்திரத்தில் இதுவரை வெளிவராத ஓர் இந்தியப் பிரயாணம் இஃது எனக் கொள்ளல் வேண்டும்.

உடுப்பிட்டி அருளம்பல முதலியார் குமாரர் பெயர் அம்பலவாண முதலியார். 19ம் நூற்றாண்டில் கோப்பாயில் வாழ்ந்தவர். இவர் வாழ்க்கை வரலாறு நாவலர் பிரபந்த திரட்டு (1954) முதற் பாகம் (பக் 165-166) என்னும் பகுதியிலும், இவரது வம்சாவழி யாழ்ப்பாண வைபவ கௌமுதி (பக் 249 250) யிலும், உதயதாரகை இதழ்களிலும் கூறப்படுகிறது.

நாவலரும் அம்பலவாண முதலியாரும் ஒன்றுகூடிய காரணத்தை இனி ஆராய்வோமாக. ——

## வையகம் நினைவு

8ம் பக்கத்து வளர்ச்சி

பெம்மான் அம்மான் எம்மான் என்று இறைவனை இன்புறச் சொல்லிய மகாகுரவர் மகன் என்ற சொல்லின் அருமையையும் இவ்விடத்தில் ஒருங்கே அமைத்தல் ஆழ்ந்து சிந்திக்கற்பாலது. மகன் - மைந்தனைக் குறிக்கும் சொல்லாய் மக்களையெல்லாம் ஈடேற்றும் ஈசனுக்கும் அமையுமானால் மக்கட்பிறவியின் மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ.

கடவுள் என்று பொருள்படும் மகன் என்னுஞ்சொல்லுக்குரிய மானிடர் கடவுட்டன்மையைக் கைவிடா தொழுகுதல் கடமையன்றோ.

இக்குருபூசை நன்னாளில் இக்கருத்துக்களை மட்டும் எண்ணினால் இக்குரவரை ஏற்றவாறு பூசித்ததாகும்.

## குரு வாக்கியம்

1ம் பக்கத்து வளர்ச்சி

மறைந்து நின்று செலுத்தும் குருவடிவம் நாம், நாம் இங்கே இப்பொழுது உங்களுக்குச் சமய தீக்ஷை செய்யப் பெற்றீர்கள். இந்தச்சமய தீக்ஷை வாயிலாக நீங்கள் சைவசமயத்திலே பிரவேசித்தீர்கள. விபூதியை மந்திரத்தோடுதரிக்கப் பெற்றீர்கள்.

ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நாம் உபதேசிக்கப் பெற்றீர்கள் தேவார திருவாசகம் ஓத அதிகாரம் பெற்றீர்கள். குருலிங்கசங்கமங்களுக்குத் தொண்டு செய்ய உரிமை பெற்றீர்கள். எல்லாவகையாலும் பசுபதியாகிய சிவபெருமானுக்கே அடிமைபூண்டீர்கள்.

5 இனி மரணபரியந்தம் அனுட்டிக்கலாகாத கருமங்கள் எவை, அனுட்டிக்கத்தக்க கருமங்கள் எவை என்று நீங்கள் நன்றாக ஆராய்ந்து அறிந்துகொள்ளல் வேண்டும். அனுட்டிக்கலாகாத கருமங்களை மரணபரியந்தம் விலக்கிவிட வேண்டும்.

அனுட்டிக்கத் தக்க கருமங்களை மரண பரியந்தம் அனுட்டித்தல் வேண்டும்.

பெரும்பான்மையும் எல்லாச்சமயத்தாரும் விலக்கத்தக்க பாதகங்கள் உயிர்க்கொலை, களவு, கள்ளுண்ணல், மச்ச மாமிசம் புசித்தல், பொய், வியபிசாரம் முதலியவைகள். இவைகளை நீங்கள் ஒருபொழுதுஞ் செய்யலாகாது.

எ பிதா மாதா முதலிய பெரியோர்களை ஒருசிறிதும் அவமதியாது எந்நாளும் மிக்க மரியாதை செய்து பாதுகாத்து நடத்தல் வேண்டும். வறியவர்களாயுந் தொழில் செய்து சீவனஞ் செய்ய வல்லமை இல்லாதவர்களாயும உள்ள கூனர், குருடர், முடவர், வியாதியாளர், கிழவர் இவர்களுக்குச் சமயம வாய்க்கும் பொழுது உங்களாலே கூடியஉதவி செய்தல் வேண்டும் உங்களுக்குத் தீமை செய்தவர்களுக்கும் நீங்கள் நன்மையே செய்தல் வேண்டும். இவையெல்லாம் எல்லாச் சமயத்தாருக்கும் வேண்டப்படும் தருமங்கள்.

(வளரும்)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம்: 15032/ஈடு

1. கணபதிப்பிள்ளை நடராசா பெண்
2. சரஸ்வதி, புலோலி தெற்கு—வழக்காளிகள்

எதிராக

செகநாயகம்பிள்ளை சிவஞானசுந்தரம்,
8ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை—எதிராளி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும், குறித்த கோட்டால் எனக்குத் திரும்பவும் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1981ம் ஆண்டு யூலை மாதம் 15ந் திகதி (15-7-1981) புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் குறித்தகாணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா50,000[

தீர்வைத் தொகை

ரூபா 8,850/- வும் மேலும் வருஷமொன்றிற்கு நூற்றுக்கு 12வட்டி விதம் 29.5.1979 தொடக்கம 14.1.1980 வரைக்கும் பின் வருஷமொன்றுக்கு விற்பனவுத்திகதி வரை 9வீதவட்டியும், செலவில் ஓர் பகுதி ரூபா 200/- உம்.

இதில் ரூபா 1,500/-—15.8.1980 ல் கொடுக்கப்பட்டுள்ளது
மேலும் ரூபா 1,000/- —16.12.1980 கொடுக்கப்பட்டுள்ளது

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று. பருத்தித்துறை வென்றி பாகுதேவன் குறிச்சிலிறை "சலவி" நிர.4குளி 9,3/8இது 1962ம ஆண்டு மாசி மாதம் 26ந் திகதி உலாந்தா மேஸ்தர் எஸ்.சுப்பிரமணியத்தால் 998 ம இலக்கத்தில் அளந்து விஸ்தாரிக்கப்பட்ட படத்தின் படி நிர.4.குளி 10,24/32 இதில குறித்தபடத்தில 1ம் இலக்கத் துண்டுக்கு நிர.1 குளி 2.22/32 இதுவும் குறித்த படத்தில 2ம் இலக்கத் துண்டுக்கு குளி 8,2/32 இதுவும் தற்போது ஒரே துண்டாயிருக்கிறது. இதற்குக் கூடிய நிர.1 குளி 10,24/32 எல்லை கிழக்கு றோட்டு வடக்கு பசுபதி சதாசிவத்துக்குரிய ஆதனம், மேற்கு தம்பர் வேதலிங்கத்துக்குரிய ஆதனம். தெற்கு வல்லி மாணிக்கத்திற்கும் பெண் சின்னப்பிள்ளைக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கட்டடங்கள் மற்றும் அடங்கலும்.

தி. வேலுப்பிள்ளை. ஜே பி
ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு
ஆணையாளர், விலைமதிப்பாளர்.

"குகச்சர் வாசம்",
வல்வெட்டித்துறை,
6.6.1981. (J-5.J / 46)

Hindu Organ

Friday, 29-5-81, 5, 12-6-81

## BRUTISH BEASTS

The terrible ordeal of the passengers and the crew of a Turkish Air-liner that was hijacked to Bulgaria cannot fail to touch the hearts of all humans all the world over. That the brutish beasts who staged this frightful drama had been overpowered is another question. What is intriguing is that despite all precautions that are minutely taken by the officers of aircrafts against intruders, it has often happened that these hostage hunting hoodlums could enter the cockpits without being apprehended

The Secretary General of the U. N. O. has suggested during the course of a public reception that international co-operation should be made available to throttle this treacherous trend of horrible crime Though it is late in the day, yet the concern for human welfare demands united and unified action and that forthwith.

This is in the international scene. And inside every country the marauder and the murderer appear at regular intervals and play havoc among innocent men and women, infants and the infirm. These startling stunts assume, with the success of undetection, the mark of heroism.

Thus mankind has become miserable. The production of deadly weapons of war, and the manufacture of sub machine guns, hand bombs and other destructive arms together surpass the efforts of the people to produce articles of food!

No nation is moral enough to prohibit the production of articles that either directly or indirectly endanger the lives of the people. The manufacture of intoxicating drinks never disturbs the conscience of the rulers of these countries

How then can crime be eliminated?

The nations of the world that claim to lead humanity have miserably failed. They have instead made it convenient for crime to thrive.

Now it is a matter of a direct challenge to noble living. Violence in all its vicious form has emerged as the most formidable weapon against decent living. The writing on the wall is conspicuously inauspicious.

How can mankind survive this malicious challenge.

Undoubtedly religious practice alone can remove this growing ulcer in the body politic.

Religious practice does not mean mere pulpit orations. The practice of non - killing and non-drinking will in the first instance go a long way to remedy the grevious situation.

## The River of Life

(By Master Subramuniya)

You have undoubtedly heard of the sacred river of India. the Ganges. but have you ever wondered why this river is sacred to the Hindus? The river is the esoteric symbol of life's force. As it flows, it tells us how cosmic currents flow through the physical body, quieting the emotions and awakening the will power to that we can keep the fluctuating power of individual awareness under our control This all happens, of course, providing we are aware of and in tune with the flow of life force, that unlimited power within us. As the river flows to meet the sea, it drops off many disturbances. just as our life absorbs many of its hindrances. The rapids smooth out: the waterfalls become smaller. Finally. this esoteric symbol of life merges with the infinite oceans, as do we on the eternal path of enlightenment.

Let us relate the symbols of a river and an ocean to our own consciousness. holding within our mind the river as a symbol of life. Observe yourself and try to find what stops that inner river of life force from flowing, What stops you from flowing more and more with cosmic forces and becoming one with life's ocean of eternal bliss?

Is it not the attachment that keeps us clinging to the bank of the river? Is it not fear and doubt that we are attached to? All of the personalities we know and the various material objects we cling to keep us holding tightly to the banks of life's cosmic river. The river still flows on. but, we do not flow with it. We are fighting against life's currents when we allow our individual awareness to remain attached

### WE ARE ATTACHED

Think today about the personal experiences that you have already had in your lifetime and clearly inwardly view how often you cling to the banks of life's river by attaching your awareness to personalities and possessions. Have you ever stopped to think that we even become attached to what we do not like and to what we have done against our better judgement?

We are attached to objects, values. schedules, habits, memories even likes and dislikes. We become attached because we do not stop to reflect, meditate and understand that each of those experiences that conceived the attachment of awareness was just a boulder, a waterfall or an old tree trunk blocking off the little revulets as they sought to merge with the great stream that is ever merging itself into the ocean. Meditate on a river, Follow it as a visual image from its source to the end where it merges into the sea. Realize that you have a river of pure life force flowing through you at this moment. Hold that walization permanently irethin you.

You can now clearly see where you have been clinging to the bank of life's river Openly observe just how long you have been clinging to various attachments by holding awareness in the area of fears, worries, doubts of the future, and regrets about the past To perceive our attachments is the first step we take towards being a detached and independent spiritual being.

Examining attachment we see how it restricts our power of awareness and submerges the personality. Attachment is a stationary thing; attachment created the personality. Now, detach your individual awareness from that which it is aware of and flow freely through all areas of the mind, releasing the power of the spiritual force within you. Absorb that power through the body and feel it flowing through your most subtle nerve currents and out as a darshan to the world.

Once attachment is understood and released, this vibrant spiritual force will energize every cell of your body, quieting the emotions and bringing you into effortless powers of meditation.

**Wsdom is detachment.**

The detachment of one's awareness is stronger than any attachment could be, because attachment is created through unfulfilled desire, salted and peppered with fear. Fear of loss, fear of the unexpected, fear that life may not have much more to offer than what has already been offered, fear of old age, fear of harm fear of accident-these are the fears which spice unfulfilled desires This is the essence of attachment The detachment of aware ness gives birth to wisdom.

To be affectionately detached; that is a power It can be a love greater than any emotional love, a love born of understanding a love that merges you into the river of life and allows the life force within you to flow deeply so that you realize God within.

Of course, we all still have those little attachment — the good ones. These attachments form the positive aspects of the sub conscious mind. However, the subconscious is a phase of the mind we do not want to be aware in to often We want to release our individual awareness from that subconscious state of mind and use it positively as a powerhouse directed by our superconscious.

(To be continued)

## Literary Luminary

Embellishing Tamil Literature is a duty to which only few become entitled by reason of their abiding devotion to their mother tongue,

Rev. Fr, Gnanapragasar had been such a keen student of several languages that he was able to discover the natural glory of Tamil in all aspects of etymological excellence

As a historian the distinguished Father spent his lifetime in assuring himself of the vastness of the Tamil Language, its pristine glory and its pre-eminent place among the tongues of the world

The scope of the Tamil Language and its significance are of a luxuriant nature; any true son of Tamil soil can make himself entitled to enjoy this exuberance and become a dutiful devotee.

Rev. Fr. Gnanapragasar was one such gifted Tamil, His literary works will linger in the memory of all linguists for ever. Devotees of the Tamil Language will always cherish feelings of gratitude to a distinguished literator,

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

## பவள விழா.........

(1 பக்கத் தொடர்ச்சி)

ஆண்டறிக்கையைக் கூறும் பொழுது சமாசத் துக்கும் இலங்கைக்கு முள்ள நீண்ட காலத் தொடர்பினைச் சுட்டிக்காட்டித் தரிக்கை தேவஸ்தானம் பவளவிழா விற்பங்கு கொண்டது பெருமைக்குரிய தென வியந்தனர்.

விழாத்தலைவர் சித்தாந் தவித்தகர் முரு. பழ. இரத் தினம் செட்டியாரின் தலை மையுரை கேட்போர் அனை வரையும் சிந்திக்க வைத் தது (இந்த சாதனை இதழி லிற் சிலபாகங்கள் வெளி யாயின)

### மாலை நிகழ்ச்சிகள்

முதலாவதாக பண்டிதர் க. உமாமகேஸ்வரன் குமரகுருபர் காட்டும் இலக்கிய வழிச் சைவசித்தாந்தம் என்ற பொருளினை நன்கா ராய்ந்துபேசினர்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 29-5-81, 5, 12-6-1981*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam